**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **103/2022** |
| **பெயர்:** | **நாடிமுத்து( Rep. by POA For Sampoorna Aqua Agency) -PW1** |
| **தந்தை பெயர் :** | **நடேசன்** |
| **வயது:** | **41/2025** |
| **ஊர்:** | **எரளிவயல், அழகியநாயகி புரம்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **மேலாளர் - Sampoorna Aqua Agency** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **18th day of July 2025**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03:58 pm**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**
**( PW1 Cross is Allowed by means of Crlmp 1480/2024)**
**எதிரி ஆஜர்**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார் (பலகை எழுத்தர் நிலை -3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் +2 படித்திருக்கிறேன். நான் **Sampoorna Aqua Agency** ல் வேலை சேருவதற்கு முன் மலேசியாவில் 2006-2014 வரை வேலை பார்த்தேன். 2014 க்கு பின் Sampoorna Aqua Agency -ல் மேலாளராக பணியில் சேர்ந்தேன்.

2. எனக்கு கொடுக்கப்பட்ட Power of Attorney பதிவு செய்யப்படவில்லை. எனக்க கொடுக்கப்பட்ட Power of Attorney -ல் சாட்சியம் அளிக்க எனக்கு

அனுமதி அளிக்கப்பட்டதா என்றால், என்னுடைய Power of Attorney ல் 2வது பக்த்தில், கடைசி 3 வரிகள் கூறுவது என்வென்றால், " மேலும் இந்த வழக்கு சாதகமாக யாவற்று நடவடிக்கைகளுக்கும் தாங்கள் தொடர்ந்து நடத்தவும் தங்களுக்கு இதன்மூலம் அதிகாரம் அளிக்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. அதனால், நான் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் உள்ளது.

3. எனது Power of Attorney ல் 3 வது பக்கத்தில் முதல் 2 வரியில் " மேலும் இவ்வழக்கில் விசாரணை காலத்தில் நாங்கள் நேரடியாக ஆஜராகி சாட்சியம் அளித்துக்கொள்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் EX-P11 ஆனது என்னுடைய Salary Slip என்று சொன்னால், சரிதான். என்னுடைய 2014-2021 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வரையுள்ள Salary slip ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் 2014-2021 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வரையுள்ள காலத்தில், நான் Sampoorna Aqua Agency -ல் தான் வேலை பார்த்து வருகிறேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், 2021 ஆகஸ்ட் மாதத்திற்கான Salary slip மட்டுமே தாக்கல் செய்துள்ளேன்.

5. எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு என்பெயரான நாடிமுத்து என்ற பெயரில் அனுப்பப்பட்டதா என்றால், அனுப்பபடவில்லை.

6. எதிரி எங்கள் Sampoorna Aqua Agency -ல் இறாலுக்கான தீவனங்கள் வாங்கினார் என்பதற்காக, எதிரிக்கு அனுப்பப்பட்ட Bill ல் ஏதேனும் என்னுடைய கையெழுத்து போடப்பட்டு அனுப்பப்பட்டதா என்றால், இல்லை.

7. எதிரிக்கு அனுப்பப்பட்ட இறால் தீவனத்திற்கு உரிய ஆவணங்கள் ஏதேனும் என் புகார் மனுவில் கூறியுள்ளதுபோல தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், இல்லை. எதிரிக்கு அனுப்பப்பட்ட

தீவனங்கள் பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்று சொன்னால், தெரியும். எனக்கு இவ்வழக்கின் பரிவர்த்தனை நேரடியாக தெரியும் என்ற சங்கதியினை எனது நிரூபனவாக்குமூலத்திலும் மற்றும் புகார் மனுவிலும் கூறப்படவில்லை என்று சொன்னால், சரிதான்.

8. 2014-2021 ஜீலை வரை நான் Sampoorna Aqua Agency ல் வேலை செய்யவில்லை என்றும், எனது முதலாளி கேட்டுக்கொண்டதன் பெயரில் நான், இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்று சொன்னால், சரியல்ல.

9. Sampoorna Aqua Agency நிறுவனம் வருமான வரி செலுத்தி வருகிறது. அதில் எதிரியான ஐயப்பனுக்கு கடன் கொடுத்ததை பற்றி தெரிவித்துள்ளோமா என்றால், தெரிவித்துள்ளோம். அதற்கிணங்க ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை. எதிரிக்கு கடன் கொடுத்த விபரத்தை வருமானவரியில் தெரிவிக்காததால் தான் இந்நீதிமன்றத்தில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

10. இந்நீதிமன்றத்தில் எனக்கு சாட்சியம் அளிக்க எந்தவொரு அறுகதையும் இல்லை என்றும், அந்த சாட்சியத்தை இந்நீதிமன்றம் ஏற்கத்தேவையில்லை என்று சொன்னால், சரியல்ல.

11. எதிரியானவர் எங்கள் Sampoorna Aqua Agency ல் இறால் தீவனம் வாங்கினார் என்பதற்கு இவ்வழக்கில் ஏதேனும் ஆவணம் சமர்ப்பித்தேனா என்றால், இல்லை.

12. எனது புகார் மனு மற்றும் நிருபனவாக்குமூலத்தில் உள்ள சங்கதி அனைத்தும் என்னால் சொல்லப்பட்டு அச்சடிக்கப்பட்டது. அதில் உள்ள சங்கதி அனைத்தும் எனக்கு தெரியும்.

13. எதிரியானவர் எந்தெந்த தேதியில் எங்களது Sampoorna Aqua Agency ல் இறால் தீவனம் வாங்கினார் என்ற விபரம், எனது புகார் மனு மற்றும் நிரூபன வாக்குமூலத்தில் கூறபடவில்லை என்று சொன்னால், சரிதான்.

14. எதிரியானவர் எந்தெந்த தேதியில் எங்களது Sampoorna Aqua Agency ல் இறால் தீவனம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், எதிரியானவர் பலமுறை வாங்கியிருப்பதால் எனக்கு ஞாபகம் இல்லை, ஆனால் Transaction statement - யை பார்த்து என்னால் சொல்லமுடியும். அந்த Transaction statement – யை இவ்வழக்கில் ஆவணமாக நான் தாக்கல் செய்யவில்லை. எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை எதிரியானவர் இறால் தீவணம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், அதையும் Transaction statement - யை பார்த்துதான் என்னால் சொல்லமுடியும்.

15. எதிரியானவர் எவ்வளவு கடன் தொகை எங்களது Sampoorna Aqua Agency – க்கு கொடுக்கவேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ள தொகை எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் சுமார் 50 வழக்குகளுக்கு Power of Attorney ஆக இருப்பதால் எனக்கு ஞாபகம் இல்லை.

16. எதிரியிடடம் நான் எப்போது இறால் தீவனத்திற்கான கடன்தொகையை திரும்ப கேட்டேன் என்றால், எதிரியிடம் நான் 28.02.2022 அன்று தொலைபேசியின் மூலம் எங்கள் Sampoorna Aqua Agency – க்கு வந்து கணக்கை சரிபார்த்து கணக்கை முடியுங்கள் என்று கூறினேன்.

17. எதிரியிடம் நான் 28.02.2022 அன்று தொலைபேசியின் மூலம் எங்கள் Sampoorna Aqua Agency – க்கு வந்து கணக்கை சரிபார்த்து கணக்கை முடியுங்கள் என்ற மேற்கூறிய விபரத்தினை எனது புகார் மனு மற்றும் நிரூபனவாக்குமுலத்தில் கூறப்படவில்லை என்றால், சரிதான். அதற்குப்பதில் நான், எதிரியிடம் தொகையை செலுத்துமாறு கூறினேன். எந்த நேரத்தில் எதிரிக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன் என்ற விபரத்தை நான் என் புகார் மனுவில் கூறவில்லை. அப்படி நான்

தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவில்லை என்று சொன்னால், சரியல்ல.

18. எனது புகார் மனுவில் கூறியதுபோல எதிரியிடமிருந்து இறால் தீவனத்திற்காக ரூ.2,47,400/- (இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நானூறு) ரூபாய் நிலுவையில் உள்ளது என கூறியிருக்கிறேன் என்று சொன்னால், சரிதான்.

19. இவ்வழக்கின் காசோலை தொகையான ரூ. 3,00,000/- (மூன்று இலட்சம்) புகார் மனுவில் கூறப்பட்டது போன்று எதிரி, அன்றைய தினமே (28.02.2022) புகார்தாரர் நிறுவனத்தின் தலைமையிடமான பட்டுக்கோட்டைக்கு வந்து, காலதாமத்திற்காக வட்டியாக ஒரு சிறிய தொகை சேர்த்து ரூ. 3,00,000/- (மூன்று இலட்சம்) கொடுப்பதாகவும், அதனை 10 நாட்களில் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டு பின்தேதியிட்டு காசோலை கொடுப்பதாகவும், வங்கியில் அதை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தி எதிரி கணக்கு வைத்திருக்கும் மதுரை கிளை, அலகாபாத் வங்கியில் மாற்றத்தக்க காசோலை எண். 561021 என்ற காசோலையை புகார்தாரர் நிறுவனத்தின் பெயரையும் பூர்த்தி செய்து கொடுத்தார் என்ற விபரம் மனுவில் கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

20. எதிரி Sampoorna Aqua Agency – க்கு இறால் தீவனத்திற்காக கொடுக்கவேண்டிய தொகை ரூ.2,47,400/- (இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நானூறு) மட்டும்தான் என்றால், சரிதான். ரூ.2,47,400/- க்கு என்ற தொகைக்கு வட்டியுடன் சேர்த்து மொத்தம் ரூ. 3,00,000/- (மூன்று இலட்சம்) மட்டும்தான்.

21. எனது புகார் மனுவில் எதிரியானவர், எந்த தேதியில் வந்து எங்கள் Sampoorna Aqua Agency – ல் இறால் தீவனம் கேட்டார் என்ற விபரத்தை நான் கூறியுள்ளேனா என்றால், நான் கூறவில்லை.

22. 26.04.2018 – 28.06.2018 என்ற காலத்தில் எதிரியானவர் என்ன தேதியில் இறால் தீவனம் பெற்றார் என்ற விபரத்தை என் புகார் மனுவிலும் மற்றும் நிரூபனவாக்குமூலத்திலும் நான் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். அதற்கான ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை.

23. 28.02.2022 அன்று எதிரியானவர் Sampoorna Aqua Agency – க்கு வரவில்லை என்றும், அப்படி அவர் வந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால், சரியல்ல.

24. 2019 ம் ஆண்டுக்கு முன்பே எதிரியானவர் Sampoorna Aqua Agency – ல் இறால் தீவனத்திற்கான கணக்கு வழக்கை முடித்துவிட்டார் என்றும், 2019-க்கு முன் பிணையாக( Security) கொடுக்கப்பட்ட காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

25. அலகாபாத் வங்கி மற்றொரு வங்கியுடன் Amalgamate ஆகிவிட்டது என்றதால், எதிரி கொடுத்ததாக கூறப்படும் காசோலை, காசோலை தேதியான 10.03.2022 க்கு முன் கொடுக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல.

26. என்னிடம் காட்டப்படும் EX-P1 ஆன காசோலையில் உள்ள கையொப்பம் மட்டும்தான் எதிரி போட்டுள்ளார் என்றும், மீதமுள்ள விபரத்தினை நான்தான் பூர்த்தி செய்தேன் என்று சொன்னால், சரியல்ல.
27. எதிரியானவர் 28.02.2022 அன்று எந்த நேரத்தில் என்னிடம் காசோலை கொடுத்தார் என்ற விபரத்தை எனது புகார் மனுவில் கூறபடவில்லை என்று சொன்னால், சரிதான்.

28. எனக்கு இவ்வழக்கின் சங்கதி ஏதும் தெரியாது என்றும், எனது முதலாளிகளுக்கே இவ்வழக்கின் அனைத்து சங்கதியும் தெரியும் என்றும், அவர்கள் சாட்சியம் அளித்தால்தான் இந்த வழக்கின் உண்மைத்தன்மை தெரியும் என்று சொன்னால், சரியல்ல.

29. கடந்த 28.02.2022 ம் தேதி நான் எதிரியை தொலைபேசியில் தொடர்புகொள்ளவில்லை என்றும், எதிரியானவர் ராமநாதபுரத்தில் இருந்து பட்டுக்கோட்டைக்கு வந்து இவ்வழக்கின் காசோலையை

**கொடுத்தார் என்று சொன்னால், இவ்வழக்கிற்காக நான் தவறான தகவல்களை ஆதாரம் இல்லாமல் கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல.**

30. **ஆதாரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தங்களுக்கு சாட்சியம் அளிக்கும் விதத்தில் எந்தவித ஆதாரத்தையும் தாக்கல் செய்யாததாலும், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள** POA **சாட்சியம் அளிக்க கொடுக்கப்படவில்லை என்றும், மேலும் அசல் தொகைக்கு வட்டிக்காக போடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இக்காசோலை மனு தள்ளுபடி செய்யவேண்டியது என்று கூறினால் சரியல்ல.**

**முடிக்கப்பட்ட நேரம் 05:35 pm**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. எம். விஷால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.